DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P. No.131/2021**

Deposition of Witness : PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தயாநிதி | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 05-11-2024.

---

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>–

விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன்பேரில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ–15.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

விபத்து சமயத்தில் மற்றொரு நபரை நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார வைத்துகொண்டு நான் வாகனத்தை ஓட்டிச்சென்றேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு எனக்கு உரிமம் இருந்தது. எனது ஓட்டுநர் உரிமத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் விபத்து சமயத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் தான் இருசக்கர வாகனத்தை பின்னால் அமர்ந்து வந்த நபருடன் பேசிக்கொண்டே அதிக வேகத்துடன் , கவனகுறைவாக ஓட்டிச்சென்றுள்ளேன் என்றும், ே மற்படி விபத்திற்கு நான் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்திலா் நான் தலைகவசம் அணியவில்லை ன்று சொன்னால ்சரியல்ல. நான் விபத்து சம்மந்தமாக கொடுத்த முதல் தகவல் அறிக்கையில் தலை கவசம் அணிந்துகொண்டு தான் வாகனத்தை ஓட்டிச்சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்திா் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் டிப்பர் லாரியை மெதுவாகவும், கவனமாகவும் ஓட்டிச்சென்றுள்ளார் என்றால் சரியல்ல. விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரரின் கவனகுறைவு காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் இவ்வழக்கிற்கு அவசிய கட்சிகாரர் என்றும் அவரை கட்சி சேர்க்காததால் இம்மனு

நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு காயம்பட்டவுடன் தேவதானபட்டி அரசு மருத்துவமனைக்கு உடனடியாக சென்றேன். அங்கு கொடுக்கபட்ட விபத்து பதிவேட்டு நகலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால் எனக்கு விரோதமாக அமைந்துவிடும் என்பதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பரிசோதனை அறிக்கைக்கும் விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள போக்குவரத்து பில்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிரீத்தி மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்காக வழங்கப்பட்ட இறுதிபில்லை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ–3 பில் இறுதி பில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ–3 பில்லின் உண்மைதன்மையை நிருபித்தால் மட்டுமே அதில் கண்ட தொகை எனக்கு கிடைக்கதக்கது என்றாலும் ம.சா.ஆ–3 ஏற்புடைய பில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ–2 ன் அசலை என்னிடம் கொடுத்திருப்பார்கள் என்றும் அதனை தாக்கல் செய்யாமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ–1 விடுவிப்ப குறிப்பில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தலைகவசம் அணிந்து உண்மையில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றிருந்தால் தலையில் காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னை தேவதானபட்டி அரசு மருத்துவமனையில் இருந்து தேனி க.விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நான் என் வசதிகாக தான் மதுரை பிரித்தி மருத்துவமனையில் சேர்ந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பில் முறையானது தான் என்பதை நிருப்பிக்க் பிரித்தி மருத்துவமனை நிர்வாகனத்தினரை விசாரிக்க தயாராக உள்ளேன். நான் விபத்து சமயத்தில் AIML course படித்துகொண்டிருந்தேன் என்பதை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தொடர்ந்து course படிக்கவில்லை. நான் தொடரந்து படிக்க முடியவில்லை என்பதை நிருபிக்கும் ஆவணங்களை தகா்கல் செய்யவி்லை நான் மேற்படி கோர்ஸ் படித்துக்கொண்டிருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு வருமான இழப்போ, நிரந்தர ஊனமோ , படிப்பு பாதிப்போ ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள நஷ்டுஈடு

அதிகபடியானது என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரரர் நஷ்டஈடு எனக்கு வழங்கவேண்டியது இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court,*
*interpreted/read over to the witness and*
*admitted by the deponent to be correct.*
*Sd/- K.Kavitha*
Chief Judicial Magistrate,
Theni.